# அடைக்கலப் பத்து

ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்* ஓரொன்று–
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு*
வானேறப் போமளவும் வாழ்வு

அடைக்கலப் பத்து

1##
பத்தி முதலாமவற்றில்* பதி எனக்கு கூடாமல்*
எத்திசையும் உழன்றோடி* இளைத்துவிழும் காகம்போல்*
முத்தி தரு நகரேழில்* முக்கியமாம் கச்சி தன்னில்*
அத்திகிரி அருளாளர்க்கு* அடைக்கலம் நான் புகுந்தேனே.

2
சடைமுடியன் சதுர்முகனென்று* இவர்முதலாந் தரமெல்லாம்*
அடைய வினைப்பயனாகி* அழிந்துவிடும் படிகண்டு*
கடிமலராள் பிரியாத* கச்சி நகர் அத்திகிரி*
இடமுடைய அருளாளர்* இணையடிகள் அடைந்தேனே.

3
தந்திரங்கள் வேறின்றித்* தமது வழி அழியாது*
மந்திரங்கள் தம்மாலும்* மற்றுமுள்ள உரையாலும்*
அந்தரங்கண்டு அடிபணிவார்* எல்லார்க்கும் அருள்புரியும்*
சிந்துர வெற்பிறையவனார்* சீலமல்லது அறியேனே.

4
காகம் இராக்கதன் மன்னர்* காதலி கத்திரபந்து*
நாகமரனயன் முதலா* நாகநகரார் தமக்கும்*
போகமுயர் வீடுபெற* பொன்னருள் செய்தமைகண்டு*
நாகமலை நாயகனார்* நல்லடிப்போது அடைந்தேனே.

5
உகக்கும் அவை உகந்து* உகவா அனைத்தும் ஒழிந்து* உறவுகுணம்–
மிகத்துணிவு பெறவுணர்ந்து* வியன் காவலென வரித்து*
சகத்திலொரு புகலில்லா* தவமறியேன் மதிட்கச்சி*
நகர்க்கருணை நாதனை* நல்லடைக்கலமாய் அடைந்தேனே.

## அடைக்கலப் பத்து

6
அளவுடையார் அடைந்தார்க்கும்* அதனுரையே கொண்டவர்க்கும்*
வளவுரை தந்தவனருளே* மன்னிய மாதவத்தோர்க்கும்*
களவொழிவார் எமரென்ன* இசைந்தவர்க்கும் காவலராம்*
துளவ முடி அருள்வரதர்* துவக்கிலெனை வைத்தேனே.

7
உமதடிகள் அடைகின்றேன் என்று* ஒருகால் உரைத்தவரை*
அமையுமினி என்பவர் போல்* அஞ்சலெனக் கரம்வைத்து*
தமதனைத்தும் அவர் தமக்கும்* வழங்கியும் தாம் மிகவிளங்கும்*
அமைவுடைய அருளாளர்* அடியிணையை அடைந்தேனே.

8
திண்மை குறையாமைக்கும்* நிறைகைக்கும் தீவினையால்*
உண்மை மறவாமைக்கும்* உளமதியில் உகக்கைக்கும்*
தண்மை கழியாமைக்கும்* தரிக்கைக்குந் தணிகைக்கும்*
வண்மையுடைய அருளாளர்* வாசகங்கள் மறவேனே.

9
சுரிதிநினை இவையறியும்* துணிவுடையார் தூமொழிகள்*
பரிதிமதி ஆசிரியர்* பாசுரம் சேர்ந்தருக்கணங்கள்*
கருதியொரு தெளிவாளால்* கலக்கமறுத்த அத்திகிரி*
பரிதிமதி நயனமுடை* பரமனடி பணிந்தேனே.

10##
திருமகளும் திருவடிவும்* திருவருளும் தெள்ளறிவும்*
அருமையிலாமையும் உறவும்* அளப்பரிய வடியரசும்*
கருமமழிப் பளிப்பமைப்பும்* கலக்கமிலா வகைநின்ற*
அருள் வரதர் நிலையிலக்கில்* அம்பென நான் அமிழ்ந்தேனே.

11##
ஆறுபயன் வேறில்லா* அடியவர்கள் அனைவர்க்கும்*
ஆறுமதன் பயனுமிவை* ஒருகாலும் பலகாலும்*
ஆறுபயன் எனவே கண்டு* அருளாளர் அடியிணைமேல்*
கூறிய நற்குணவுரைகள்* இவைபத்தும் கோதிலவே.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.